இந்திய குடியரசு தினவிழா, ஊத்தங்கரை அரசினர் பலவகை தொழில்நுட்பக்கல்லூரியில் 26-01-2023 அன்று கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பயிலக முதல்வர் திருமதி எப்சிபா ஏஞ்சலா துரைராஜ் அவர்கள் குடியரசு தின சிறப்புரை நிகழ்த்தினார். அதன் பிறகு சென்ற பருவத்தில் முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவ-மாணவியர்களில் 100 சதவீத வருகை புரிந்த 37 பேருக்கு புத்தகப்பரிசு வழங்கி பாராட்டினார்கள். குடியரசு தினவிழாவில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, ஓவியபோட்டி மற்றும் ரங்கோலி போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள். நிறைவாக மாணவ மாணவியரின் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளோடு விழா இனிதே நிறைவு பெற்றது.



இந்த நிகழ்ச்சியில் அனைத்து துறைத்தலைவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ-மாணவியர்கள் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர். இந்த விழாவிற்கான ஏற்பாட்டினை

ஒருங்கிணைப்பாளர்

- திரு விஜயன் விரிவுரையாளர்(வேதியியல்)

நடுவர்கள்

- திரு லோகேஷ் விரிவுரையாளர்(வேதியியல்)
- திரு சக்திவேல் விரிவுரையாளர்(ஆங்கிலம்)
- திரு மணிகண்டன் விரிவுரையாளர்(இயந்திரவியல் பொறியியல்)
- திரு ஹரிபிரசாத் விரிவுரையாளர்(இயந்திரவியல் பொறியியல்)
- திரு முத்துமணி விரிவுரையாளர்(மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல்)
- செல்வி கீர்த்தனா விரிவுரையாளர்(மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல்)
- செல்வி வினோதினி விரிவுரையாளர்(இயந்திரவியல் பொறியியல்) செய்திருந்தனர்.